**செய்தி வெளியீடு எண் : 1049** **நாள் : 26.07.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பள்ளி குழந்தைகளை காப்பாற்றி தன்னுயிர் நீத்த திரு.சேமலையப்பன் அவர்களின் பெற்றோர் மற்றும் மகன்களிடம் ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள்.**

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலில் உள்ள தனியார் பள்ளியில் வாகன ஓட்டுநராக பணிபுரிந்துவந்த காங்கேயம், சத்யா நகரைச் சேர்ந்த திரு.சேமலையப்பன் (வயது 49) என்பவர் 24.07.2024 அன்று மாலை பள்ளி முடிந்தவுடன் பள்ளிக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கோவை – திருச்சி நெடுஞ்சாலை வெள்ளக்கோவில் பழைய காவலர் குடியிருப்பு அருகே வந்து கொண்டிருந்த போது தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் உடனடியாக தான் ஓட்டிவந்த பள்ளி வாகனத்தில் இருந்த பள்ளிக் குழந்தைகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாத வகையில் பத்திரமாக நிறுத்திய பின்னர் தன்னுயிர் நீத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (26.07.2024) திருப்பூர் மாவட்டம், காங்கேயம், சத்யா நகரைச் சேர்ந்த திரு.சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவரது பெற்றோர் மற்றும் மகன்களிடம் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள்.

பள்ளி குழந்தைகளை காப்பாற்றி தன்னுயிர் நீத்த காங்கேயம் சட்டமன்றத் தொகுதியை சார்ந்த திரு.சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப., அவர்கள், திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டலத் தலைவர் திரு.இல.பத்மநாபன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.குமாரராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu